# இன நல்லிணக்க எண்ணக்கருவைக் கட்டியெழுப்புவதில் பாடசாலை மதப்பாடப் புத்தகங்களின் வகிபங்கு: தரம் பத்து மதப் பாடப் புத்தகங்களை மையப்படுத்திய ஆய்வு

The Role of School Religious **Textbooks on Building Racial Reconciliation: A Study Focused on Grade Ten Religious Textbooks**

A.M.M. Hijas[1], I.F. Ilma[2], M.I.F Asna[3], A.F. Aashika[4] & M.H.A. Munas[5]

[1] 4th Year Student, [2] 3rd Year Student, Department of Arabic Language,
[3&4]3rd Year Student, Department of Islamic Studies
[5]Senior Lecturer, Faculty of Islamic Studies and Arabic Language
hijas392@gmail.com, ilmaisamdeen@gmail.com, asnaf698@gmail.com,
aashikaalfardeen1997@gmail.com, mhamunas@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை பௌத்தம், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய சமூகங்களை கொண்டுள்ள ஒரு பன்மைத்துவ நாடாகும். இன்றைய சமுதாயமானது சமய இன பேதங்களால் தாக்குண்டு வன்முறை, பாகுபாடு பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்ற பலவற்றால் கட்டுப்பட்டு சமூக நல்லுறவு என்ற அடித்தளத்தை விட்டு விலகிச் செல்வதை காணமுடிகிறது. இந் நல்லிணக்க எண்ணக்கரு தனிமனிதன், குடும்பம், சமூகம் என்ற மட்டத்தில் போதிக்கப்பட வேண்டும். நல்லிணக்க எண்ணக்கரு சிறுபராயத்தில் விதைக்கப்பட்டால் இலங்கையின் எதிர்காலம் வளர்ச்சி மிக்கதாக அமையும் என்ற கருதுகோளின் அடிப்படையில், தரம் 10 மத பாடப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள இன நல்லிணக்க எண்ணக்கருவை மதிப்பீடு செய்து பகுப்பாய்வுக்கு உட்படுத்தல், அதனூடாக இன ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைகளையும் தந்திரோபாயங்களையும் முன் வைத்தல் போன்ற நோக்கங்களை கொண்டுள்ளன. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகளின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவாக தரம் 10 பௌத்த மதப் பாடப் புத்தகத்தில் இன நல்லிணக்கத்திற்கான தனியானதோர் அலகு காணப்படுவதாகவும் அதில் நேரடியாக ஐந்து இடங்களிலும் மறைமுகமாக மூன்று இடங்களிலும் இன நல்லிணக்கம் விதைக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளதுடன் இந்து பாடநூலில் மூன்று இடங்களில் மறைமுகமாகவும், இஸ்லாம் பாடப்புத்தகத்தில் மூன்று இடங்களில் நேரடியாகவும் நான்கு இடங்களில் மறைமுகமாகவும், கிறிஸ்தவ பாடநூலில் மூன்று இடங்களில் நேரடியாகவும் இரண்டு இடங்களில் மறைமுகமாகவும், கத்தோலிக்க பாடநூலில் ஒரு இடத்தில் நேரடியாகவும் மூன்று இடங்களில் மறைமுகமாகவும் இனநல்லிணக்கம் பேசப்படுவதாகவும், இது மதப்பாடப்புத்தகங்களில் இனநல்லிணக்க எண்ணக்கருவின் போதாமையை சுட்டிக்காட்டுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இன நல்லிணக்கத்திற்கான தனியானதொரு பாடம் வகுத்தல் மற்றும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் கல்விச்சூற்றுலாக்கான ஆலோசனையை பாடசாலைகளுக்கு பரிந்துரைத்தல் போன்ற ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

Key Words: மதப் பாடம், பாடப் புத்தகம், இன நல்லிணக்கம், பாடசாலை

## ஆய்வு அறிமுகம்

இலங்கை பல்லின சமூகங்களை கொண்ட ஒரு நாடு என்ற ரீதியில் இனங்களுக்கிடையே நல்லுறவைப் பேணிப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் தொன்மைக் காலத்திலிருந்து தொடங்கிவிட்டது எனலாம். இன நல்லிணக்கம் என்பது “வேறுபட்ட இனக்குழுக்கள் சமாதானமாகவும் சகவாழ்வும் வாழக்கூடிய நிலையை குறிப்பிடுகின்றது.” (SOMANDA N.D)[39]

இன நல்லிணக்கம் தொடர்பில் பொதுவாக வரைவிலக்கணத்தை காண்பது கடினமாகும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் (2011) நல்லிணக்கம் மற்றும் இன

[39] Somananda, V.O. (N.D). *Role of social work in building ethnic harmony through religions practice*. http://www.bpu.ac.lk/resources/170/

நல்லிணக்கம் போன்ற பதங்கள் ஒன்றுக்கொன்று பதிலீடாக பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அபே குணசேகர மற்றும் குணரத்ன (2012) ஆகியோரது கருத்துப்படி மீண்டும் மோதல் ஏற்படாமல் அதற்கான அடிப்படைகளை குறைக்கும் தந்திரோபாயமாக, போராளிகளின் மனதையும் உள்ளத்தையும் வெல்வது, உடன் பாதிக்கப்பட்ட சமூகங்களிடையே நட்புறவை கட்டியெழுப்புவதுமாக காணப்படுகின்றது.[40] இதன் மூலம் பல்வேறு குழுக்களுக்கிடையிலான நல்லிணக்கம் வலியுறுத்தப்படுகின்றது.

ஆக்கிரமிப்புகள் பல இலங்கைமீது தொகுக்கப்பட்டன. அதில் 1505 போர்த்துக்கேயர் தம் மதம் மொழி என்பவற்றை பரப்ப கையாண்ட உத்தியே கல்வி, அவர்கள் தங்களது கத்தோலிக்க மத மக்களிடையே பரப்ப பாடசாலைகள் உருவாக்கப்பட்டது. இதன் பின் 1658இல் இலங்கையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் தமது புரட்டஸ்தாந்து மதத்தை பரப்ப கட்டாயக் கல்வி முறையைக் கையாண்டனர். ஐந்து வயதுக்குட்பட்ட அனைவரும் கல்வி கற்க வேண்டிய நிலை உருவானதுடன் பெண் கல்வி, கலைத்திட்டம், பாட உள்ளடக்கம், விடுமுறை ஒழுங்கு, ஆசிரியர்களுக்குரிய அடிப்படை தகைமை, தொடர்பான கட்டளைகள் போன்ற விடயங்கள் கல்வியில் புகுத்தப்பட்டன. 1798-1930 ஆங்கிலேயர்கள் கல்வியில் மாறாத தடங்களை உருவாக்கி சென்றனர். 1834 முதலாவது பாடசாலை ஆணைக்குழு உருவாக்கப்பட்டபின் ஆட்சியில் படிப்படியாக வளர்ச்சி கண்ட இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின் 1970ம் ஆண்டு அதிகளவு பட்டதாரிகள் இருந்தும் வேலை இல்லா திண்டாட்டம் ஏற்படும் அளவிற்கு கல்வியின் பாதை விடுவிக்கப்பட்டு, 1972 கல்விச் சீர்திருத்தம் என்றும் 1997 கல்விச் சீர்திருத்தம் என்றும் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. கலாநிதி CWW கண்ணங்கர இலவசக் கல்வித் திட்டத்தை உள்ளடக்கிய மசோதாவை 1944 மே 30 சட்ட சபையில் நீண்ட உரையுடன் அறிமுகம் செய்தார். 1943 கல்வி சீர்திருத்தத்தின் விசேட குழுவின் அறிக்கையுடன் சமயக் கல்வி அறிமுகமானது.[41] பாடசாலைகளில் சமயக்கல்வி கட்டாயப்பாடமாகவும் G.C.E.O/L பரீட்சைக்கு ஒரு பாடமாகவும் 11.11.1981 இல் அமைச்சரவை அங்கீகாரமளித்தது. இவ் ஆய்வானது இலங்கையிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற தரம் 10 மதப்பாடப் புத்தகங்களான பௌதம், இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம், கத்தோலிக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இனநல்லிணக்க எண்ணக்கரு உட்புகுத்தப்பட்டுள்ள அளவை மதிப்பீடு செய்வதாகவும், இன நல்லிணக்கத்தை வித்திடுவதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதாகவும் அமைந்துள்ளது.

**இஸ்லாம்**

இஸ்லாம் என்ற சொல்லிற்கு சாந்தி, சமாதானம், கீழ்ப்படிதல், முழுமையாக அர்ப்பணித்தல் என பொருள்படும். அகில உலகங்களையும் படைத்து பரிபாலிக்கின்ற ஒரே இறைவன் அல்லாஹ் என்றும் அவனைத்தவிர வணங்கி வழிபடத்தகுதியானவன் வேறு ஒருவரும் இல்லை என்றும் அவனுடைய படைப்பினமான மனிதனுக்கு சத்திய நேர்வழி காட்டிட அவன், ஆதி மனிதன் ஆதம் அலைஹிஸ் ஸலாம் முதல் தொடராக இறைவன் அனுப்பிய தூதர்களில் முஹம்மத் நபி ஸல்லல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதியானவர் என்ற நம்பிக்கை கொண்டு செயல்படுபவர்களே முஸ்லிம்களாவர். இறைவன் தன்னுடைய திருக்குர்ஆனிலே 112 அத்தியாயத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.
(நபியே) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே, அல்லாஹ் (எவரிடத்திலும்) தேவையற்றவன், அல்லாஹ் எவரையும் பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை, அன்றியும் அவனுக்கு நிகராக எவருமில்லை”[42]
இஸ்லாம் சமயம் மனித மேன்மையை முதன்மையாகக் கொண்டு உலக மக்களிடையே நல்லுணர்வையும் சமாதானத்தையும் வளர்க்க விரும்புகிறது. உலகளாவிய ரீதியில் முஸ்லிம் சனத்தொகை 1.8 பில்லியனாகும். இலங்கை சனத்தொகையில் முஸ்லிம்கள் 9% காணப்படுகின்றனர்.
தரம் 10 இஸ்லாம் பாடநூல் ஓரிறை நம்பிக்கை கோட்பாடு, தூதுத்துவம், தொழுகை, இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள் ஆன அல்குர்ஆன் சுன்னா, துணை மூலாதாரங்கள், மனித உரிமை, நடுநிலை பேணல் போன்ற இஸ்லாத்தின் முக்கிய அம்சங்கள் அனைத்தும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

---

40 Sajeetha, T.F. (2017). *Ethnic Harmony in Post-war Sri Lanka.* https://www.researchgate.net/publication/318348515.

41 நஹியா ஏ.எம். (2018) *இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்.*

42 *அல் குர்ஆன், அத்தியாயம் 112,* வசனம் 1 - 4

**இந்து சமயம்**

பிற சமயங்கள் போலன்றி இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று யாருமில்லை. இதனை நெறிப்படுத்த அல்லது கட்டுப்படுத்த என ஒரு மைய அமைப்பு இதற்கு இல்லை. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் என்பவற்றைக் உள்வாங்கி உருவான ஒரு சமயமே இந்து சமயம். இந்து சமயம் வேதங்களையும், தொடர்ந்து வந்த உபநிடதங்கள் மற்றும் காலங்காலமாகப் பல்வேறு குருமார்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆன்மீக அடிப்படையில் தங்கியுள்ளது. வேதத்துவஞானப் பிரிவுகள், பக்தி யோகம், கர்ம யோகம் ஞான யோகம் மற்றும் யோகா, தந்திர ஆகமப் பிரிவுகள் என்பவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் சிந்தனையோட்டங்கள் அனைத்தும் இந்து சமயம் என்கின்ற ஒரே சமுத்திரத்திலே சங்கமமாகின்றன.

நம்பிக்கை, அன்பு, உறுதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட எல்லாவிதமான சமயச் செயற்பாடுகளும், இறுதியாக ஒரே தன்னுணர்வு நிலைக்கே இட்டுச் செல்கின்றன. அதனால்தான் இந்து சமயச் சிந்தனைகள் பல்வேறுபட்ட நம்பிக்கைகள் தொடர்பில் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கின்றன.
ஒரு இந்துவுக்கு, “நிலையான தர்மம்'' என்பதை வரையறுப்பதில், இந்த எண்ணமே உந்து சக்தியாக உள்ளது.[43]

இந்து சமயம், இந்தியாவில் தோன்றிய, காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றெனக் கருதப்படுகிறது. ஏறக்குறைய 950 மில்லியன் இந்துக்களைக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது.
தரம் 10 சைவ பாடநூலானது கடவுள் கொள்கை, வாழ்வியல் விழுமியங்கள், தீபாவளி, இந்து திருமண சடங்குகள், நாட்டார் வழிபாடு இலக்கியங்கள் என சைவ சமயத்தின் அடிப்படை அம்சங்களை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது.

**கிறிஸ்தவம்**
கிறிஸ்தவம் ஓரிறைக் கொள்கையுடைய சமயமாகும். இயேசுவின் வாழ்வையும் அவரது போதனைகளையும் மையப்படுத்தி புதிய ஏற்பாட்டின்படி செயற்படுகிறது. சுமார் 2.4 பில்லியன் உறுப்பினர்களைக் கொண்டு (உலக மக்கள் தொகையில் 33.3%) உலகின் பெரிய சமயமாகக் காணப்படுகிறது. கிறிஸ்தவம் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.[44] இதில் கத்தோலிக்க திருச்சபை மிகப்பெரியதாகும். யூதம் மற்றும் இஸ்லாம் போலவே கிறிஸ்தவமும் தன்னை ஆபிரகாம் வழி வந்த சமய நம்பிக்கையாகக் கொள்வதால் அது ஆபிரகாமிய சமயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

தரம் 10 கிறிஸ்தவ பாடநூலானது இறைவாக்கு, இயேசுவின் பிறப்பு, சிறப்புப்பணி, இயேசுவின் யூத சம்பிரதாயங்கள் என அனைத்து அடிப்படை அம்சங்களையும் உள்ளடக்கியதாக பாட அலகுகள் அமைந்துள்ளன.

**கத்தோலிக்கம்**
கத்தோலிக்கம் என்பது கிறிஸ்தவ திருச்சபைகளில் இறையியல், கோட்பாடு, திருவழிபாடு, அறநெறி கொள்கைகள் மற்றும் ஆன்மீகம் சார்ந்தவற்றில் பரவலாக பயன்படுத்தப்படும் ஓர் பதமாகும். இப்பதம் பொதுவாக கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவ சபையையும் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டாலும் பெருவாரியாக கத்தோலிக்க திருச்சபையைக் குறிக்கவே பயன்படுகின்றது. ஆயினும், ஏனையோர் முதலாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்துவரும் கிறிஸ்தவ சபைகளை குறிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

தரம் 10 கத்தோலிக்க திருமறை பாடநூலில் பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள், புதிய ஏற்பாட்டு நூல்களின் வகைகள், ஞான இலக்கியம் என்ற இறை அன்பு, திருப்பலி, அன்பின் சமுதாயம், திருவழிபாட்டு ஆண்டு என்பவற்றைக் கொண்டு பாட அலகுகள் காணப்படுகின்றன.
**பௌத்தம்**
பௌத்த சமயம் என்பது கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையிலான ஒரு சமயமும், தத்துவமுமாகும். பௌத்த மரபின் படி, புத்தர் கிமு 4-6ஆம் நூற்றாண்டுகளுக்கிடையே இந்தியத் துணைக்கண்டத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்தவர் ஆவார்.

---

[43] பழீல் எம்.ஏ .(2001). *இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லிணக்கம்.* p 27 - 34
[44] பழீல் எம்.ஏ .(2001). *இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லிணக்கம்.* p 35 - 43

பௌத்த உலகப் பார்வையில் கடவுள் இருப்பதை அனுமானிக்கவில்லை, அப்படி இருந்தாலும் அதற்கான தேவை அங்கு இல்லை. கர்ம விதிகளுக்கு அமையவே உலகம் இயங்குகின்றது, அதை மீறிய மீவியிற்கை ஒன்றிருப்பதைப் பௌத்தம் மறுக்கின்றது. அப்படி இருந்தால் எந்த ஒரு பொருளுக்குமான இருப்பை நோக்கிய பௌத்தத்தின் அடிப்படை மூன்று விதிகளான நிலையாமை (அனைத்தும் மாறிக்கொண்டே இருப்பது - Anicca), ஆன்மா இன்மை (அழியாத ஒன்றாகக் கருதப்படும் ஆன்மா என்பது கிடையாது - Anatta), துக்கம் இருக்கிறது (துயரம், துன்பம், மகிழ்வற்ற நிலை - Dukkha) மீறியே கடவுள் என்ற ஒன்று இருக்க வேண்டும், அது பௌத்தத்தின் உலகப் பார்வைக்கு ஒவ்வாது என்று கருதுகின்றனர்.
புத்தர் கடவுள் இல்லை. அவர் ஒரு விடுதலை பெற்ற மனிதர். பௌத்தர்கள் புத்தரை வழிபடுவதில்லை, மரியாதை செலுத்துகின்றார்கள் அல்லது நினைவு கொள்கின்றார்கள்.

பௌத்த சமயத்தில் முக்கியமான இரண்டு பிரிவுகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன: தேரவாத பௌத்தம் (முதியோர் பள்ளி), மற்றும் மகாயான பௌத்தம் (பெரும் வாகனம்).[45]
தரம் 10 பௌத மத பாடநூலில் புத்தரின் வருகை, எங்கள் உரிமையும் சகவாழ்வும், கர்மா மற்றும் அதன் வகைகள், புத்தரின் போதனைகள், நற்பண்புகள் என அனைத்து அடிப்படை அம்சங்களையும் உள்ளடங்கியதாக பாடஅலகுகள் அமைந்துள்ளன.

**ஆய்வுப் பிரச்சினை**

பல்லின, பல் பிரதேச மக்கள் வாழும் இலங்கை நாடானது இன்று சக வாழ்வு, நல்லிணக்கம் போன்றவற்றின் தேவையில் உள்ளது. 1948 ஆண்டு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் கிடைத்திருந்த போதிலும் இலங்கையில் அபிவிருத்தி நிலை போதாமலே உள்ளது. இதற்கு இன முறண்பாடுகளே மையக் காரணமாக உள்ளன.

இலங்கை அரசானது மதப் பாடங்களை தனது கல்விக் கொள்கையில் இணைத்து, அதனைக் கட்டாயப் பாடமாகப் பிரகடனப்படுத்தி, குறித்த பாடத்திற்கான பாடத்திட்டங்கள், ஆசிரியர் கையேடுகள் என பல்வேறு அம்சங்கள் துறைசார் அறிஞர்களால் வரைந்து 40 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருவதுடன் இப்பாடத்திற்காக தனியான ஆசிரியர் நியமனங்களும் வழங்கிவருகின்றது.
இன முறண்பாடற்ற தூய இலங்கையை உருவாக்க பாடசாலை மாணவர்களிடம் இன நல்லிணக்க, சகவாழ்வு எண்ணக்கரு வியாபிக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் போதிக்கப்படும் மதப் பாடப்புத்தகங்களில் இன நல்லிணக்க எண்ணக்கருவின் அளவீடே இவ்ஆய்வின் மையப் பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

- தரம் 10 மதப் பாடப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள இன நல்லிணக்க எண்ணக்கருவை மதிப்பீடு செய்து பகுப்பாய்வுக்குட்படுத்தல்.
  - ✓ பௌத்தம், ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் கத்தோலிக்கம் ஆகிய ஐந்து மதங்களுடைய தரம் 10 மதப் பாடப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள இன நல்லிணக்க எண்ணக்கருவை மதிப்பீடு செய்தல்.
  - ✓ மதிப்பீடு செய்யப்பட்ட இன நல்லிணக்க எண்ணக்கருவை ஒப்பீடு செய்து பகுப்பாய்விற்குட்படுத்தல்.
- மதப் பாடப்புத்தகங்களினூடாக இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைகளையும் தந்திரோபாயங்களையும் முன்வைத்தல்

**ஆய்வின் முக்கியத்துவம்**

இந் நல்லிணக்க எண்ணக்கரு சிறுபராயத்தில் விதைக்கப்பட்டால் இலங்கையின் எதிர்காலம் வளர்ச்சி மிக்கதாக அமையும் என்பது ஆய்வாளர்களின் எதிர்வுகூறல். அந்த வகையில் இதற்கு முன்னர் இவ்வாறானதொரு ஆய்வு முன்னெடுக்கப்படவில்லை என்ற ரீதியிலும் இவ் ஆய்வின் மும் மொழிவுகள் இன நல்லிணக்க எண்ணக்கருவை பாடசாலைக் கல்விமட்டத்தில் தோற்றுவிக்க வழிகோலும் என்ற ரீதியிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

**ஆய்வு முறையியல்**

---

[45] பழீல் எம்.ஏ .(2001). *இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லிணக்கம்.* p 13 - 26

பாடசாலை மதப் பாடப் புத்தகங்களை மையப்படுத்திய இவ் ஆய்வானது அளவுசார் (Quantitative) மற்றும் பண்புசார் (Qualitative) முறையிலமைந்த ஓர் விவரிப்பு ஆய்வாகும் (Descriptive study). ஆய்வினை நேர்த்தியாகப் பூரணப்படுத்தும் வகையில் முதலாம் நிலைத்தரவு மூலம்களான ஐந்து மதப்பாட ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் மற்றும் மதப்பாட ஆசிரியர்களோடு தொலைபேசி தொடர்புகள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக அரச பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 10 மாணவர்களது மதப் பாடப்புத்தகங்கள், ஆசிரியர் வழிகாட்டி நூல்கள், நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையதள குறிப்புகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத்தளபக்கங்கள் ஆகியவற்றின் மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

**இலக்கிய மீளாய்வு**

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இது தொடர்பான ஆய்வுகள் தேடலுக்கு உட்படுத்தப்பட்ட போது இனநல்லினக்க எண்ணக்கரு பல்வேறு கோணத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ள போதிலும் இவ் ஆய்வுடன் பொருந்தும் வகையில் ஆய்வுகள் செய்யப்படாமை இனங்காணப்பட்டதோடு தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் என அனைத்து விடயங்களும் இலக்கிய மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

பஹ்ரி எம்.ஏ.எம் (2019), ***பல்லின சமூகங்களுக்கு இடையிலான நட்புறவும் நபிகளார் பெருமானாரின் வழிகாட்டல்களும்.***
இவ்வாய்வு கட்டுரை முஸ்லிம்- முஸ்லிம் அல்லாதோருக்கிடையிலான நட்புறவு தொடர்பான இஸ்லாத்தின் வழிகாட்டல்களை சரியான கோணத்தில் விளங்குதல், பல்லினங்களுக்கிடையிலான சமூக நட்புறவுக்கான இஸ்லாத்தின் வழிகாட்டல்களை நபிகள் நாயகத்தின் வாழ்வொழுங்கிலிருந்து முன்வைத்தல் போன்ற நோக்கங்களை கொண்டுள்ளது. இவ்வாய்வின் முடிவாக நாகரிகங்களுக்கிடையிலான மோதல் சிந்தனைகளும், அரசியல், பொருளாதார நலன்களை பாதுகாத்துக் கொள்வதும், பெரும்பான்மை சமூக ஆதிக்கமுமே இன்றைய உலகில் இனங்களுக்கு இடையிலான இடைவெளி தூரமாகுவதற்கான பிரதான காரணிகளாகவும் இவ்விடைவெளிகளை குறைப்பதற்கு திறந்த மதங்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் தொடர்ந்தேர்ச்சையாக நடைபெற வேண்டும் என முன்வைக்கப்பட்டுள்ளது.

ஹபிபுல்லாஹ் MT (2019), ***இன நல்லுறவு, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் முஸ்லிம் சமய நிறுவனங்களின் பங்களிப்பு :*** *கிண்ணியா ஜம்மியத்துல் உலமாவின் இன நல்லுறவு சமாதானச் செயற்பாடுகளை மையப்படுத்திய ஒரு ஆய்வு*
இவ்வாய்வு சமூக களத்தில் இயங்கு நிலையிலுள்ள முஸ்லிம் சமய நிறுவனங்களின் பங்களிப்புக்களை மதிப்பீடு செய்தல், இன நல்லுறவு, சமாதானம் போன்ற எண்ணக்கருக்களை செயல்வடிவப்படுத்துவதில் கிண்ணியா ஜம்இய்யதுல் உமாவின் வகிபாகத்தை வெளிக்கொண்டு வருதல், இவைகளை நடைமுறைப்படுத்துவதில் ஜம்இய்யதுல் உலமா எதிர்நோக்கும் சவால்கள், அவற்றின் செயற்றிறனை மேலும் வலுவூட்டக்கூடிய பரிந்துரைகளை முன்வைத்தல் போன்ற நோக்கங்களை கொண்டுள்ளது. மக்களிடையே நல்லிணக்கம், சமாதானம் என்ற எண்ணக்கருவை உருவாக்குவதில் சமய நிறுவனங்களில் இலங்கையில் முக்கிய இடத்தை வகிக்கின்ற ஜமியத்துல் உலமாவின் செயற்பாடுகள் இன்றியமையாதது என்பது முடிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.
நிஸ்பா MSF (2019) ***சம கால இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முஸ்லிம்களின் பங்கு, களுத்துறை முஸ்லிம் சமூகத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு***
இவ்வாய்வானது இலங்கை வாழ் முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் நல்லுறவைப் பேணி வாழ்வதற்கு தடையாக உள்ள காரணிகளைக் கண்டறிதல், இஸ்லாமிய அறிவுரைகளினால் முஸ்லிம்களை இன நல்லிணக்கத்துடன் வாழ வழிவகைகளை பரிந்துரைத்தல் போன்ற நோக்கங்களை கொண்டுள்ளது. ஆலோசனைகளாக முஸ்லிம் சமூகத்தை மாற்றுவதற்கான வழிவகைகளை செயற்படுத்துவதன் ஊடாக இனங்களுக்கிடையில் நல்லுறவு பேணி சிறந்ததொரு நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியும் என்ற தகவல்கள் முடிவுரையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

சிந்து எஸ் பிரியா (2016) ***சமூக நல்லுறவை மேம்படுத்துவதில் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் பங்களிப்பு, யாழ் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு.***

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினால் வெளிப்படுத்தப்படும் நற்சிந்தனைகள் எவ்வாறு சமூகநல்லுறவிற்கு வித்திடுதல் என்பதை வெளிக்கொண்டு வருதல் என்பதை இவ்வாய்வு நோக்காக கொண்டுள்ளது. இந்நிறுவனத்தால் பல விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் பல கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்ற போதும் அது பாரிய அளவு எல்லோரையும் சென்றடைகிறது எனக் கூற முடியாது. இவை மக்களைச் சென்றடையும் வகையில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றால் வெளிப்படுத்தப்படும் போது நிறுவனத்துக்கான குறிக்கோள் வெற்றியை நோக்கி விரைவில் அடியெடுத்துச் செல்லும் என்பது முடிவுரையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (Result and Discussion)**

1. **நோக்கம்**

   **தரம் 10 மதப் பாடப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள இன நல்லிணக்க எண்ணக்கருவை மதிப்பீடு செய்து பகுப்பாய்வுக்குட்படுத்தல்.**

   ✓ **பௌத்தம், ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் கத்தோலிக்கம் ஆகிய ஐந்து மதங்களுடைய தரம் 10 மதப் பாடப்புத்தகங்களில் கூறப்பட்டுள்ள இன நல்லிணக்க எண்ணக்கருவை மதிப்பீடு செய்தல்.**

***பௌத்தம் தரம் 10***

''சமவாயோ எவசாது'' - ஒற்றுமையே நல்லது

''நமக்காக கோதபாய விவதத'' - ஒன்றிணையுங்கள் தர்க்கம் புரியாதீர்கள்

*அபே கம் சஹா சஹஜீவனய (11ம் பாடம்) (பக்கம்-62)*

''பௌத்த போதனைகளுக்கேற்ப சமாதானம்,ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமென்றால் தீய சிந்தனைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும் அத்துடன் நல்ல சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளவேண்டும் இன மத பேதங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவருக்கொருவர் கோபத்துடனும் வைராக்கியத்துடன் நடந்துகொள்வதை பௌத்த மதம் நிராகரிக்கின்றது.புத்தர் மதத்தவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்''

*அபே கம் சஹா சஹஜீவனய (11ம் பாடம்) (பக்கம்-62)*

இப்பாடத்திட்டத்தில் முழுமையாக நல்லிணக்கம் பற்றிப் பேசப்படுகின்றது. ஆரம்பத்தில் நல்லிணக்கம் என்றால் சமாதானம் ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்து வாழ்தல் என்பதாகவும் இவை மனிதர்கள் மத்தியில் காணப்பட வேண்டிய உயர்ந்த குணம் என்றும் பௌத்த மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இப்பாடத்தில் ஏனைய மதஸ்தலங்களுக்கு தீங்கிழைக்காதிருத்தல், அவர்களின் மத சார்பான விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்காதிருத்தல் மற்றும் ஏனைய மதத்தவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பன பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

''எவ்வாறு எமக்கு எமது மதத்தை பின்பற்றும் உரிமையும் சுதந்திரமும் உள்ளதோ அவ்வாறே ஏனைய மதத்தவர்களுக்கும் அவர்களது மதத்தை பின்பற்றும் உரிமையும் சுதந்திரமும் உள்ளது அத்துடன் ஏனைய மதத்தவர்களுடன் ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று பௌத்த மதத்தின் ஊடாகவும் புத்தரின் வழிகாட்டலின் ஊடாகவும் போதிக்கப்பட்டுள்ளது''

*அபே கம் சஹா சஹஜீவனய (11ம் பாடம்) (பக்கம்-63)*

''புத்தர் ஏனைய மத போதனைகளை எதிர்க்கவில்லை எனினும் அவர் சமாதானத்துடன் நடுநிலையில் நின்று சேர்ப்பதோடு இனிய மதத்தினையும் கௌரவித்தார். மேலும் ஏனைய மதஸ்தலங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என்றும் அவைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.''

*அபே கம் சஹா சஹஜீவனய (11ம் பாடம்) (பக்கம்-63)*

தரம் 10 பௌத மத பாடப் புத்தகத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து வேறு எந்த மதப்பாடப்புத்தகத்திலும் இல்லாத விஷேட அம்சமாக நான்கு பக்கங்களைக்கொண்டதாக ஒரு தனி பாட அலகு காணப்படுவதுடன் அதில் இனநல்லிணக்கம் பற்றி ஐந்து இடங்களில் நேரடியாகவும் நான்கு இடங்களில் பரவலாக மறைமுகமாகவும் கூறப்படுகின்றது.

### ***தரம் 10 சைவ நெறி புதிய பாடத்திட்டம்***

> “அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு”(திருக்குறள்) ஆகவே நாம் ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்ட வேண்டும் சகல உயிர்களிடத்தும் கருணை காட்ட வேண்டும் அன்போடு நடந்து கொள்பவருக்கு உலகம் முழுவதும் நண்பர்கள் அடைவார்கள் நாம் மற்றவர்களிடம் அன்பு காட்ட காட்ட மற்றவர்கள் நம்மிடம் அன்பு காட்டுவார்கள்”
>
> *சைவ விழுமியங்கள், அலகு-3, பக்கம்-16,17*

மேற்குறித்த பந்தியானது ஒருவரோடொருவர் அன்பு பராட்டுவதோடு சகல உயிர்களுடன் அன்பாக இருக்க கூறுகின்றது. இதனூடாக இங்கு இனநல்லிணக்கம் பற்றி மறைமுகமாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

> “சக மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் செய்யும் நற்கருமங்கள் தொண்டுகள் பசு புண்ணியம் எனப்படும்”
>
> *சைவ தருமம் அலகு-25, பக்கம்-157*

மேற்கூறப்பபட்ட கூற்று சக மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் செய்யும் நற்கருமங்கள் புண்ணியமாக கருதப்படுவதாக மறைமுகமாக இனநல்லிணக்கம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

> “அறங்கள் யாவற்றுக்கும் அடிப்படையானது அன்பே நமது குடும்பத்தவரிடமும் அன்பு இருப்பதனால் நாம் அவர்களுக்கு நன்மையே செய் கிறோம். அது போல் எல்லா உயிர்களிடமும் அன்பு வைப்போம் ஆயின் எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்வோம்”
>
> “சக மனிதனுக்கும் பிற உயிர்களுக்கும் உதவுதல் நமது கடமையாகும்”
>
> *சைவ தர்மம் அலகு-25, பக்கம்-158*

மேற்கூறப்பட்டுள்ள பந்தியில் சக மனிதனுக்கும் பிற உயிர்களுக்கும் உதவுதல், அது போல் எல்லா உயிர்களிடமும் அன்பு வைப்போம் என்பதினூடாக எல்லோரும் சக வாழ்வோடு வாழ பணிக்கின்றது. இதில் மறைமுகமாக இனநல்லிணக்கம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தரம் 10 சைவ சமய பாடப்புத்தகத்தை ஒட்டு மொத்தமாக வைத்து நோக்கும் போது, நாம் மற்றவர்களிடம் அன்பு காட்ட மற்றவர்கள் நம்மிடம் அன்பு காட்டுவார்கள், சக மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் செய்யும் நற்கருமங்கள் புண்ணியம், சக மனிதனுக்கும் பிற உயிர்களுக்கும் உதவுதல் நமது கடமையாகும் எனும் சொற்பிரயோகத்தினூடாக இனநல்லிணக்கம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

### ***தரம் 10 இஸ்லாம் புதிய பாடத்திட்டம்***

> “ஒருவர் பிறிதொருவர் மீதோ ஏனைய ஜீவராசிகள் மீதோ அன்பு காட்டுவதால் எதுவும் குறைந்துவிடப்போவதில்லை பகரமாக அல்லாஹ்வின் அன்பும் பிறரின் அன்பு, மரியாதை முதலானவையும் அவருக்குக் கிடைத்துவிடுகின்றன. இது சமூக மட்டத்தில் பரஸ்பரம், மகிழ்ச்சி, ஒற்றுமை, நல்லிணக்கம், சுபிட்சம் என்பன நிலவுவதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றது.
>
> அன்பு வைத்தவன் இரு பிரிவுகளாக பிரித்து நோக்கலாம்.
>
> 1. அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல்
> 2. படைப்பினங்கள் மீது அன்பு வைத்தல்
>
> *நற்பண்புகள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் 2, அலகு -12,பக்கம் -49*

மேற்குறித்த பந்தியில் ஒருவர் பிறிதொருவர் மீதோ ஏனைய ஜீவராசிகள் மீதோ அன்பு காட்டுதல், சமூக மட்டத்தில் பரஸ்பரம், மகிழ்ச்சி, ஒற்றுமை, நல்லிணக்கம், சுபிட்சம் என்பன நிலவுவதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றதென இங்கு நேரடியாகவே இனநல்லிணக்கம் பற்றி எடுத்துக்காட்டப்படுகிறது.

> “அன்பு வைத்தலின் அடுத்த நிலை தன்மீதும் தன் பெற்றோர், உறவினர்கள், அயலவர்கள், முஸ்லிமல்லாதார் மீதும் அன்பு காட்டுவதாகும்”
>
> *நற்பண்புகள் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம்,அலகு-12, பக்கம்-50*

இப் பந்தியில் அயலவர்கள், முஸ்லிமல்லாதார் மீதும் அன்பு காட்ட வேண்டும் எனக்கூறுவதனூடாக நேரடியாகவே இனநல்லிணக்கத்தை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பந்தியில் இனம், இடம், நிறம், தோற்றம் போன்றவற்றால் வர்க்க முறன்பாடு ஏற்படுத்தக் கூடாது என்பதன் மூலம் இனநல்லிணக்கம் மறைமுகமாக

மனிதர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள், இனம், இடம், நிறம், தோற்றம் போன்றவற்றால் வேறுபடுத்த முடியாதவர்கள்.
“மனிதர்களே உங்களது இரட்சகன் ஒருவனே, அறிந்து கொள்ளுங்கள், அறபிகள் அறபிகள் அல்லாதோரிடவோ, வெள்ளை நிறத்தவர், கறுப்பு நிறத்தவர்களை விடவோ மேம்பட்டவர்கல்லர். இறையச்சத்தின் மூலமாகவோ நீங்கள் உயர்ந்தவர்களாக கணிக்கப்படுவீர்கள் (பைஹகீ) என நபி ஸல் அவர்கள் கூறியிருக்கிறார்கள்”

*மனித உரிமை அலகு -26,பக்கம்-122*

எடுத்துக்காட்டப்படுகிறது.

மேலும் ஒருவர் முஸ்லிம் என்ற வகையில் உற்றார் உறவினர், நண்பர்கள், அயலார், அநாதைகள், ஆதரவற்றோர், வேலையாட்கள், தன் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்வோர், முஸ்லிமல்லாதோர் முதலான சகல மனிதர்கள் மீதும் அன்பு காட்டுதல் வேண்டும்.”

*நற்பண்புகள் பற்றிய கண்ணோட்டம் 2 அலகு -12,பக்கம் -51*

இப் பந்தியில் அயலவர்கள், அநாதைகள், ஆதரவற்றோர், முஸ்லிமல்லாதார் மீதும் அன்பு காட்ட வேண்டும் எனக்கூறுவதனூடாக நேரடியாகவே இன நல்லிணக்கத்தை தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

“விசுவாசிகளே அல்லாஹ் அல்லாதவற்றை அவர்கள் இறைவனின் அழைக்கிறார்களோ அவற்றை நீங்கள் திட்டாதீர்கள் அதனால் அவர்கள் அறியாமை காரணமாக வரம்பு மீறி அல்லாஹ்வை திட்டுவார்கள் இவ்வாறு ஒவ்வொரு வகுப்புக்கும் அவர்களுடைய செயலை நாம் வைத்திருக்கின்றோம் பின்னர் அவர்கள் தங்கள் இறைவனிடமே செல்வார்கள் அவர்கள் செய்து கொண்டிருந்தது பற்றி அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்”(6:108)

*மனித உரிமை, அலகு-26, பக்கம்-123*

“மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை ஏனென்றால் வழி கேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது” (2:256) என்று அல்குர்ஆன் குறிப்பிடுவது தனி மனிதன் தான் விரும்பிய சமயத்தை பின்பற்ற முடியும் என்ற சமய சுதந்திரத்தை எடுத்துக்காட்டுகிறது

*மனித உரிமை அலகு-26,பக்கம்-122*

“போர் சமாதானம் என்ற இரு நிலைகளில் எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என அல்குர்ஆன் குறித்து காட்டுகிறது. அது போரை விட சமாதானத்தை முற்படுத்துகிறது. இஸ்லாத்தில் சமாதானம் விதியாகவும், போர் விதி விலக்காவும், திருமணத்தில் முஷ்ரிக்கை கைவிட மு.்.மினை முற்படுத்த வேண்டும் (2:221) என்பதும் இன்மைக்கான உழைப்பை விட மறுமைக்கான உழைப்பையும் உட்படுத்த வேண்டும் என்பதும் (16:30) சில ஆதாரங்களாகும்”

*பிக்ஹல் அவ்லிய்யாத் அலகு-30, பக்கம்-138*

மேற்குறிப்பிட்ட பந்திகளில் தனி மனிதன் தான் விரும்பிய சமயத்தை பின்பற்ற முடியும் என்றும் மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் உரிமை பற்றிக் கூறியும் இனநல்லிணக்கத்தை மறைமுகமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
மேற்குறிப்பிட்ட பந்தியில் போரை விட சமாதானத்தை முற்படுத்துகிறது. இஸ்லாத்தில் சமாதானம் விதியாகவும் போர் விதி விலக்காவும் கூறப்படுகின்றது, இது மறைமுகமாக இனநல்லிணக்கம் பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
தரம் 10 இஸ்லாம் பாடத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து இனநல்லிணக்கம் பற்றி மூன்று இடங்களில் நேரடியாகவும் நான்கு இடங்களில் மறைமுகமாகவும் கூறப்படுகின்றன.

### ***தரம் 10, கத்தோலிக்க திருமறை புதிய பாடத்திட்டம்***

அருள்பணி மைக்கல் றோட்றிகோ (அ.ம.தி) அடிகளார் அவர் ஆற்றிய சேவைகளின் முக்கியமான சேவைகளில் ஒன்று மதநல்லிணக்கத்தை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

“பௌத்த கிறிஸ்தவ சமயங்களுக்கு இடையே நட்புறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தல்”
*(தியாக வாழ்வின் முன்மாதிரிகை, பாடம் 15, பக்கம் 75)*

அவர் செய்த செயல் திட்டங்களில் பிரதானமானவைகளாக ஒற்றுமை, சமாதானம், நேர்மைக்காக குரல் கொடுத்தல் போன்றன காணப்படுகிறன.

“சமாதானம், நேர்மைக்காக குரல் கொடுத்தல்”
*(தியாக வாழ்வின் முன்மாதிரிகை, பாடம் 15, பக்கம் 76)*

மேற்குறிப்பிட்ட பந்திகளில் பௌத்த கிறிஸ்தவ சமயங்களுக்கு இடையே நட்புறவையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தல் என்று கூறுவதன் ஊடாக இன நல்லிணக்கம் பற்றி நேரடியாக எடுத்து கூறப்படுவதைக் காணலாம்.

“சமாதானத்தை ஏற்படுத்த முன்வராமை”
*மானிட வளங்களை பாதுகாப்போம், பாடம் 18, பக்கம் 102*

ஐந்தாம் கட்டளைக்கு எதிரான செயல்கள் எனும் பட்டியலில்

இங்கு சமாதானத்தை ஏற்படுத்த முன்வராமை என்ற கூற்றின் ஊடாக இன நல்லிணக்கம் ஓரளவு போதிக்கப்படுவது எடுத்து நோக்கப்படுகிறது.

அன்னை தெரேசா அவர்களைப் பற்றி குறிப்பிடுகையில்: சாதிமதம் பாராமல் அன்பும் அரவணைப்பும் என்ற தொடரில் மறைமுகமாக இன நல்லிணக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை குறிப்பிடலாம்.

“சேரிகளில் வாழ்வோரை சந்திப்பது அவரின் வழக்கம் சாதி மதம் பாராமல் கைவிடப்பட்டோர் அநாதைகள் நோயாளிகள் மரணத்தருவாயில் உள்ளவர்களுக்கு அவரின் அரவணைப்பும் அன்பும் குறைவில்லாது கிடைத்தது”
*தியாக வாழ்வின் முன்மாதிரி, பாடம் 15, பக்கம் 73*

“ஆலயத்தின் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தில் தரம் 10 மாணவர்களின் புதிய ஆலோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. அதற்கிணங்க அப்பகுதிகளிலுள்ள எழுத வாசிக்க முடியாத மாணவர்களை ஒன்று சேர்த்து கற்பிப்பதற்கு அவ்வேளை திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. குருவானவரின் அனுமதியுடன் மாணவர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். மாணவர்களின் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் கண்டு வியந்த பகுதி மக்கள் அவர்களுக்கு தேவையான உணவு, குளிர்பானம், கற்றல் உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி தமது ஒத்துழைப்பை நல்கினர். இவர்களின் செயற்பாட்டை கேள்வியுற்ற அக்கிராமத்தின் ஏனைய பிள்ளைகளும் இன, மத பேதமின்றி இவ்வேளை திட்டத்தில் பங்கு பற்றினர். குருவும் கிராம வாசிகளும் மாணவர்களின் இந்த முயற்சிக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்து மென்மேலும் ஊக்கப்படுத்தினார்”.
*புதிய ஏற்பாட்டு நூல்களின் வகைகள், பாடம் 2, பக்கம் 7*

இங்கு இன மத பேதமின்றி என்ற சொற்பதத்தினால் இனநல்லிணக்கம் பேசப்படுகிறது.

தரம் 10 கத்தோலிக்க பாடப்புத்தகத்தை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இனநல்லிணக்கம் ஆனது தனிப்பாட அலகாகவோ, ஒரு குறிப்பிட்ட அலகின் பாதிப்பரப்பாகவோ இல்லாவிட்டாலும் 3 பாட அலகுகளில் மறைமுகமாகவும், ஒரு இடத்தில நேரடியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதை நோக்கலாம்.

***கிறிஸ்தவம், தரம் 10, புதிய பாடத்திட்டம்***

“இலங்கையர் என்ற ரீதியில் எமக்குரிய கலாசார சம்பிரதாயங்களும் இருக்கின்றன கிறிஸ்தவர்களுக்கு என்று உரியவையாக இல்லாவிட்டாலும் சமூக உறவிற்கும் அடையாளத்திற்கும் தேவைப்படுபவையாகும் (உதாரணமாக தமிழ், சிங்கள புது வருடத்துடன் தொடர்புடைய சில நடைமுறைகள், ஏடு தொடக்குதல், பெயர் சூட்டுதல், பொங்கல் கொண்டாடுதல், புதுமனை புகுதல், அத்திவாரம் இடல், தொற்றுநோய் ஏற்பட்டதும் இலைகளை தொங்க விடுதல் போன்றவை) இவ்வாறான சம்பிரதாயங்களை கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் போது திருமறைக்கும் கிறிஸ்தவ போதனைக்கும் நம்பிக்கைக்கும் எதிராக நாம் செயற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கடவுளுக்கு முதலிடம் கொடுப்பதற்கும் கடவுளின் இடத்தை வேறு பொருட்களுக்கு கொடுக்காமலும் இருக்க வேண்டும். இலங்கையர் என்ற ரீதியில் எல்லோருடனும் சமாதானத்துடன் வாழ்வதற்கு உதவியாக இச்செயற்பாடுகள் அமைந்திட வேண்டும்

*இயேசுவும் யூத சம்பிரதாயங்களும், பாடம் 5, பக்கம் 21*

“இறையரசின் பிரஜைகளான நாங்கள் இனம், சமயம், குலம் வகுப்பு பேதமில்லாமல் சேவையில் உள்ளவர்களுக்கு எப்போதும் வரையறை இல்லாமல் அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும்”

*இறையரசின் பிரஜைகள், பாடம் 23, பக்கம் 120*

யூத சமூகத்தை போன்றே இலங்கையரும் பிறரை உபசரிக்கின்ற மக்கள் என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நாம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்று இயேசு தெளிவுபடுத்தியுள்ளார். ஓர் விருந்துக்கு அழைக்கப்படும் போது நாங்கள் முதன்மையான இடத்தில் அமரக் கூடாது என்று இயேசு கூறியுள்ளார். அதை ஓர் அறிவுரை மூலமாக தெளிவுபடுத்தினார்”.

*நாளாந்த வாழ்விற்கு வழிகாட்டி,பாடம் 27, பக்கம் 147*

இங்கு இலங்கையர் என்ற ரீதியில் இனம், சமயம் குலம் பேதமில்லாமல் எல்லோருடனும் சமாதானத்துடன் வாழ்தல் என்ற வார்த்தை பிரயோகங்கள் ஊடாக இன நல்லிணக்கம்

“இயேசு சமூகத்தில் வேறுபாடுகளை தவிர்த்து சமத்துவத்தையும் சந்தர்ப்பத்தையும் முக்கியப்படுத்தி அன்பு நிறைந்த சூழலை உருவாக்க செயற்பட்டார். நாமும் அவ்வாறே செயற்படுவோம்”.

*சமூகத்திற்கு புதிய எண்ணக்கரு, பாடம் 9, பக்கம் 43*

நேரடியாக போதிக்கப்படுவதை நோக்கலாம்.

இங்கு சமூகத்தில் வேறுபாடுகளைத் தவிர்த்து என்பதன் ஊடாக தமது மதத்தின் உள்ளேயே சமத்துவத்தை போதிப்பதாக இருக்கின்றது.மாறாக இது இன நல்லிணக்கத்தை போதிப்பதாய் இல்லை என்பது புலனாகின்றது.

இங்கு சகோதரத்துவம், நீதி, சமூகத்தை வளர்ப்பது போன்ற சொற்பிரயோகங்கள் மதநல்லிணக்கத்தை போதிப்பதாக இல்லை மாறாக சமூக நல்லிணக்கத்தை போதிப்பதாக இருக்கிறது


இன்றைய சமூகத்திற்கு திருமுழுக்கு யோவானின் அறிவுரையும் கடிந்துரையும் மிகவும் பொருத்தமாக அமையும். அவை தரும் சவால்களை ஏற்று சிறந்த சகோதரத்துவத்துடன் சுயநலம் அற்றவர்களாக, தம்மிடம் உள்ளவற்றை பிறருடன் பகிர்ந்து, ஒருவரையொருவர் தாங்கி, வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி வாழ சிறந்த வழிகாட்டியாகவும் அமையும். சமூகத்தில் நாம் செய்யும் எந்த காரியத்திலும் உண்மையோடும், மிகுந்த செயல் திறனுடனும், தராதர பாகுபாடுகளை நோக்காது கொள்ளை இலாபம் தேடாது, நீதி நியாயத்துடன் பணியாற்றுவது அவசியமாகும். தவறுகள் காணப்படும் போது அவற்றை சரிப்படுத்துவதற்கு முயற்சித்து நற்பண்புகள் கொண்ட சமூகத்தை வளர்ப்பது நற்பிரஜைகளின் கடமையாகும்”.

*முன்னோடிப் பணி, பாடம் 6, பக்கம் 28*

தரம் 10 கிறிஸ்தவ பாடப்புத்தகத்தை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இனநல்லிணக்கம் ஆனது தனிப்பாட அலகாகவோ, ஒரு குறிப்பிட்ட அலகின் பாதிப்பரப்பாகவோ இல்லாவிட்டாலும் 3 பாட அலகுகளில் மறைமுகமாகவும், நேரடியாகவும் இன்னும் 2 அலகுகளில் சமூக நல்லிணக்கத்தை போதிப்பது ஊடாக மதநல்லிணக்கத்தை தூண்டுவதாக காணப்படுகின்றது என்பதை நோக்கலாம்.

மதப்பாட ஆசிரியர்களை நேர்காணலுக்குட்படுத்தி அவர்களது கருத்துக்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போது அவர்களில் இருவர்[46] தரம் 10 மதப் பாடப்புத்தகங்களில் இனநல்லிணக்கம் பற்றி போதியளவு கருத்துக்கள் உள்ளடங்கியதாகவும், ஏனைய ஆறு ஆசிரியர்கள் மதப் பாடப்புத்தகத்தில் இனநல்லிணக்கம் பற்றி போதியளவு இடம்பெறாமை கவலைக்குரிய விடயம் என்றும் தெரிவித்தனர். இனநல்லிணக்ககம் பற்றி ஒரு தனி பாடலகு ஒவ்வோர் மதப் பாடப்புத்தகத்திலும் இடம்பெற்றால் சிறப்பாக அமையும் என்று மூன்று ஆசரியர்களும்[47], தனியொரு பாடமாக இணநல்லிணக்கம் இடம்பெறுவது இன்றைய காலகட்டத்தின் கட்டாயத் தேவை என்று மூன்று ஆசரியர்களும்[48] தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

## முடிவுரை (Conclusion)




கல்வியளாளர்களை உருவாக்குவதன் மூலம் இன ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் என்பதும் இனநல்லிணக்கத்துடனூடாக தேசத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதும் கல்விக்கொள்கையாளர்களது உத்தேசம். அதன் குறிக்கோள் மதப்பாடம் வழியாகவே மாணவர்களைச் சென்றடைய வேண்டியுள்ளது. தரம் 10 மதப்பாடப்புத்தகங்களில் இனநல்லிணக்க எண்ணக்கரு பௌத மதப்பாடப்புத்தகத்தில் இன நல்லிணக்கத்திற்கான தனியதோர் அலகு காணப்படுவதாகவும் அதில் நேரடியாக ஐந்து இடங்களிலும் மறைமுகமாக மூன்று இடங்களிலும் இன நல்லிணக்கம் விதைக்கப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளதுடன் அது தவிர ஏனைய இடங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ நல்லிணக்கம் பேசப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் கத்தோலிக்கம் ஆகிய பாடநூல்களில் தனிப்பட்ட அலகு காணப்படவில்லை. இந்து பாடநூலில் மூன்று இடங்களில் மறைமுகமாகவும், இஸ்லாம் பாடப்புத்தகத்தில் மூன்று இடங்களில் நேரடியாகவும் நான்கு இடங்களில் மறைமுகமாகவும், கிறிஸ்தவ பாடநூலில் மூன்று இடங்களில் நேரடியாகவும் இரண்டு இடங்களில் மறைமுகமாகவும, கத்தோலிக்க பாடநூலில் ஒரு இடத்தில் நேரடியாகவும் மூன்று இடங்களில் மறைமுகமாகவும் இனநல்லிணக்கம் பேசப்படுவதாகதக் கண்டறியப்பட்டுள்ளது.

இது மதப்பாடப்புத்தகங்களில் இனநல்லிணக்க எண்ணக்கருவின் போதாமையை சுட்டிக்காட்டுகிறது.

### பரிந்துரைகள்

[1]. மதப் பாடப்புத்தகங்களில் தங்களது மதங்கள் பற்றிய அறிவினை வழங்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளதால் தரம் 10 இற்கு இன நல்லிணக்கத்திற்கான தனியானதொரு பாடம் வகுத்தல் மூலம் பாடசாலை மாணவர்களின் புரிந்துணர்வு வயதில் எண்ணக்கருவை வித்திட முடியும்.

[2]. இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் கல்விச்சுற்றுலாக்கான ஆலோசனையை பாடசாலைகளுக்கு பரிந்துரைத்தல்.

---

[46] இஸ்லாம் பாட ஆசிரியர் - 1
இந்து பாட ஆசிரியர் - 1

[47] இந்து பாட ஆசிரியர் - 1
பௌத பாட ஆசிரியர் - 1
கிறிஸ்தவ பாட ஆசிரியர் - 1

[3]. இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மாற்றுமத குழுக்களுடனான அமர்வுகளை ஏற்படுத்தல்.
[4]. கிராமிய, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் இன ஐக்கிய மாநாடுகளை ஏற்படுத்தல்.

**உசாத்துணைகள்**


1. ***இஸ்லாம்*** தரம்-10. பதிப்பு-2019. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். ISBN 9789552501807
2. ***சைவ நெறி.*** தரம்-10. பதிப்பு-2019. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.ISBN 9789552501777
3. ***பௌதம்.*** தரம்-10. பதிப்பு-2019. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். ISBN 9789552503764
4. ***கிறிஸ்தவம்.*** தரம்-10. பதிப்பு-2019. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.ISBN 9789552501784.
5. ***கத்தோலிக்கம்.*** தரம்-10. பதிப்பு-2019. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். ISBN 9789552503788
6. Munsoor, MM. ***Project on Institution Building: Administrative Arrangements for Implementing Devolution.*** Colombo. International Center for Ethnic Studies.
7. ஹபீபுல்லாஹ், MT. (2019). ***இன நல்லுறவு, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் முஸ்லிம் சமய நிறுவனங்களின் பங்களிப்பு*** (கிண்ணியா ஜம்மியத்துல் உலமாவின் இன நல்லுறவு சமாதானச் செயற்பாடுகளை மையப்படுத்திய ஆய்வு).
8. பஹ்றி, எம்.எஸ.எப். (2019). ***பல்லின சமூகங்களுக்கு இடையிலான நட்புறவும் நபிகளார் பெருமானாரின் வழிகாட்டல்களும்.***
9. நிஸ்பா, எம்.எஸ்.எப். (2019). ***சமகால இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முஸ்லிம்களின் பங்கு:*** களுத்துறை முஸ்லிம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.
10. சிந்து பிரியா. (2016). ***சமூக நல்லுறவை மேம்படுத்துவதில் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் பங்களிப்பு*** : யாழ் மாவட்டத்தை அடிப்படையாக கொண்ட ஆய்வு.
11. ஹிஜாஸ், ஏ.எம்.எம். மஹ்ஸூம், ஏ.ஆர்.எம். முனாஸ், எம்.எச்.ஏ. (2019). ***கல்விப் பொதுத் தராதர மாணவர்களும் அரபு மொழிப் பாடமும்:*** பொத்துவில் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு.
12. Nor Faridah Abdul Manaf. (2017). ***Peace and Harmony in Islam***: A 21st century perspective. http://www.researchgate.net/publication/317858238.
13. Aliff, S.M. (2016). ***Reconciliation in post war Sri Lanka***. http://www.researchgate.net/publication/307905734.
14. Emelie molleli. (2012). ***Sri Lanka unites and reconciliation-Transformation through change agents of a war infected nation***. www.diva-portal.org.
15. Hijas, A.M.M. Shakeer, B.A. Ruzla, F.W. Nushtha, A.N. (2019). ***Effective Study and Student's Attendance: An Evaluative Study.***
16. Sajeetha, T.F. (2017). ***Ethnic Harmony in Post-war Sri Lanka.*** https://www.researchgate.net/publication/318348515.
17. Somananda, V.O. (n.d). ***Role of social work in building ethnic harmony through religions practice***. http://www.bpu.ac.lk/resources/170/
18. முஸ்தகீமா எம்.என். (2018). ***தமிழ் பேசும் மக்களிடையே இன முரண்பாடுகள் தோன்றுவதில் தன்னினப்பற்றும் மாற்று மத புரிந்துணர்வும் செலுத்தும் தாக்கம்.***
19. Abeygoonasekera, A. Gunaratna, R. (2012). ***Reconciliation after Terrorism: The Srilankan Experience***. http://dbsjeyaraj.com/dbsj/archives/10144
20. நஹியா ஏ.எம். (2018) ***இலங்கையில் முஸ்லிம் கல்வி ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்.*** கொழும்பு. All Ceylon Muslim Educational Conference.
21. பழீல் எம்.ஏ .(2001). ***இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லிணக்கம்.*** கல்முனை. கோல்டன் அச்சகம்.
22. பிரியசகி, ச. ***இலங்கையின் கல்வி வளர்ச்சியும் நவீன மாற்றங்களும்.*** 2020.06.09. Retrieved from: https://www.virakesari.lk/article/83680 october 25th 2020

**நேர்காணல்**

1. **Mohamed Rifkhan**. Teacher. Zahira College Dharga Town. (11.8.2020)
2. **Fathima Nasmiya**. Teacher. Zahira College Dharga Town. (11.8.2020)
3. Rev. **Piyarathana,T.** Thero. Teacher. WP/pili/ Makandana Sir Sudharshana Vidyalaya-Kesbewa. (13.8.2020)
4. Rev. **Gurugoda Siriwimala** Thero. Lecturer. Nagananda (University). (13.8.2020)
5. Rev.Fr. **Roshan jayampathi. P.L.N.** Jeevana diya faith church and Bible College Horona. (14.8.2020)
6. **Sohundala.** Teacher. M/R Ensalwatta Tamil Viddyalaya Viharahena Deniyaya. (14.8.2020)
7. **Dhushanthan.** Teacher. M/R Ensalwatta Tamil Viddyalaya Viharahena Deniyaya. (15.8.2020)
8. Rev.Fr. **Jesuthasan**, **S.** SP/M/R Ensalwatta Tamil Viddyalaya Viharahena Deniyaya. (12.8.2020)